தேதி : 23.02.2018 நேரம் : மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு.நரேந்திர மோடி, இன்று புதுடில்லி-யில், கனடா பிரதமர் திரு.ஜஸ்டின் ட்ருடோ-வுடன் பிரதிநிதிகள் நிலையில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

- பிரதமர் திரு.நரேந்திர மோடி-யின் வருகையை ஒட்டி, தமிழகத்திலும், புதுவையிலும் பாதுகாப்பு வலுப்படுத்தப் பட்டுள்ளது.

- நேரடி அன்னிய முதலீடுகளை ஈர்ப்பதில், முன்னணி மாநிலமாக தமிழகம் திகழ்வதாக தமிழக முதலமைச்சர் திரு.எடப்பாடி.பழனிச்சாமி கூறியுள்ளார்.

- மூகத்தைப் போல, புதுவை அரசும், காவிரி பிரச்சனை தொடர்பாக அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தவேண்டுமென அஇஅதிமுக கோரியுள்ளது.

------

பிரதமர் திரு.நரேந்திர மோடி இன்று புதுடில்லி-யில் கனடா பிரதமர் திரு.ஜஸ்டின் ட்ருடோ-வை சந்தித்து, பிரதிநிதிகள் நிலையில் பேச்சுவார்த்தை நடத்தினர். வர்த்தகம், எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு முக்கியத் துறைகளில் உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டது. தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே கல்வி, அறிவியல்-தொழில்நுட்பம், விளையாட்டு உள்ளிட்ட துறைகளில் 6 ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. பின்னர், பிரதமர் திரு.நரேந்திர மோடி, அறிக்கை ஒன்றை வெளியிட்டுப் பேசுகையில், கனடா-வுடன் கூட்டாண்மை உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள இந்தியா மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாகக் கூறினர். தீவிரவாதத்தை ஒழிப்பதில் இரு நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினர். விண்வெளித் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா-வும் கனடா-வும் இணைந்த செயல்பட முடியும் என்றும் அவர் தெரிவித்தார். முன்னதாக, வெளியுறவு அமைச்சர் திருமதி.சுஷ்மா ஸ்வராஜ், கனடா பிரதமரை சந்தித்து, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து விவாதித்தார். கனடா பிரதமர் திரு.ஜஸ்டின் ட்ருடோ-விற்கு இன்று காலை புதுடில்லி குடியரசுத் தலைவர் மாளிகையின் முன்மைதானத்தில் சம்பிரதாய வரவேற்வு அளிக்கப்பட்டது. பின்னர் திரு.ட்ருடோ, ராஜ்காட்-டில் உள்ள காந்தி சமாதியில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். அவர் இன்று மாலை புதுடில்லி-யில் குடியரசுத் தலைவர் திரு.ராம்நாத் கோவிந்தையும் சந்திக்கிறார்.

><><><

பிரதமர் திரு.நரேந்திர மோடி, நாளை மறுநாள் அகில இந்திய வானொலியின் மனதின் குரல் நிகழ்ச்சி மூலம், தமது எண்ணங்களை நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்கிறார். பிரதமரின் இந்த 41-ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி, அன்றைய தினம் காலை 11 மணிக்கு அகில இந்திய வானொலியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாகும். இதைத் தொடர்ந்து இந்நிகழ்ச்சியின் பிராந்திய மொழி வடிவம்

இடம்பெறும். மனதின் குரல் நிகழ்ச்சியின் பிராந்திய மொழி வடிவம் அன்றிரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படும்.

><><><

பிரதமர் திரு.நரேந்திர மோடி, ஜெயலலிதா பிறந்த நாளான நாளை சென்னையில், பணிபுரியும் பெண்கள் இருசக்கர வாகனம் வாங்க 25 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கும் தமிழக அரசின் திட்டத்தைத் தொடக்கி வைத்து, ஆயிரம் பயனாளிகளுக்கு இருசக்கர வாகனங்களை வழங்குகிறார். இதற்கென, சூரத்–தில் இருந்த நாளை மாலை தனி விமானம் மூலம் சென்னை விமானநிலையம் வந்து இறங்கும் அவர், அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் அடையாறு கடற்படை தளத்திற்கு சென்று, அங்கிருந்து சாலை மூலம் கலைவாணர் அரங்கம் சென்று அடைகிறார். கலைவாணர் அரங்கத்தில் பணிபுரியும் பெண்களுக்கு இருசக்கர வாகனம் வழங்கும் விழாவில், பிரதமருடன், தமிழக முதலமைச்சர் திரு.எடப்பாடி.பழனிச்சாமி, துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செலவம் உள்ளிட்டவர்களும் கலந்துகொள்கிறார்கள். நாளை இரவு சென்னை ஆளுனர் மாளிகையில் தங்கும் பிரதமர் திரு.நரேந்திர மோடி, நாளை மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை சென்னையில் இருந்து புதுவை வந்து, அரவிந்தர் ஆசிரமம் செல்கிறார். தொடர்ந்து, ஆரோவில் சர்வதேச நகரத்தின் பொன்விழா கொண்டாட்டங்களை தொடக்கிவைக்கும் அவர், லாஸ்பேட் ஹெலிபேட் மைதானத்தில் பாரதிய ஜனதா பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பின்னர், அன்று பிற்பகல் மீண்டும் சென்னை வழியாக புதுடில்லி திரும்புவார். பிரதமரின் வருகையை ஒட்டி, தமிழகத்திலும், புதுவையிலும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

><><><

நாளை மறுநாள் காலை 10 மணிக்கு புதுவை வந்து சேரும் பிரதமர் திரு.நரேந்திர மோடி, 3 மணி நேர நிகழ்ச்சிகளுக்குப் பின்னர், பிற்பகல் 1 மணிக்கு புதுவையில் இருந்து புறப்பட்டுச் செல்வார் என்று பிரதமரின் வருகை தொடர்பான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வந்துள்ள மத்திய அமைச்சர் திரு.பொன்.ராதாகிருஷ்ணன் இன்று புதுவையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். 15 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் திரு.நரேந்திர மோடி புதுவை வந்திருப்பதாகவும், இந்திரா காந்தி–க்குப் பின்னர் புதுவையில் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் பிரதமர், திரு.நரேந்திர மோடி–தான் என்றும் அவர் கூறினர். பிரதமர் பங்கேற்கும் பொதுக்கூட்டத்தில் புதுவை மற்றும் அண்டை தமிழகப் பகுதிகளில் இருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்துகொள்ள இருப்பதாக திரு.பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். பொதுக்கூட்டம் நடைபெற உள்ள லாஸ்பேட் ஹெலிபேட் மைதானத்தில் மாநில பிஜேபி சார்பில், எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருவதாகவும், பொதுமக்கள் அதிக தூரம் நடக்கவேண்டிய தேவையின்றி, கூட்டம் நடைபெற உள்ள இடத்திற்கு அருகாமையிலேயே வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினர். பொதுக்கூட்ட மைதானத்தில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்கும் என்ருலும், பொதுமக்களுக்கு அதிக கட்டுப்பாடுகள் இருக்காது என்று அவர் குறிப்பிட்டார். கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர், புதுச்சேரி துறைமுகத்தில் பணிகள் முடிவடையும் தறுவாயில் இருப்பதாகவும்,

நாடாளுமன்றக் கூட்டத்தொடருக்குப் பின்னர் துறைமுகத்தின் செயல்பாடுகள் தொடக்கிவைக்கப் படும் என்றும் கூறினர். இதற்கிடையே, புதுவை துணைநிலை ஆளுனர் டாக்டர்.கிரண்பேடி, இன்று மத்திய அமைச்சர் திரு.பொன்.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் திரு.சத்யேந்திரசிங் துர்சாவத் ஆகியோருடன் விமானநிலையத்தைப் பார்வையிட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமரின் வருகைக்கான பாதுகாப்பு ஏற்பாடு முழுமையாக செய்து முடிக்கப்பட்டு விட்டதாகத் தெரிவித்தார். புதுச்சேரி முதலமைச்சர் பிரதமரை சந்தித்து மாநிலத்தின் நிதி நிலை குறித்து பேச இருப்பதாக துணைநிலை ஆளுனர் தெரிவித்தார். புதுவையில் முந்தைய தலைமைச் செயலர் வாரியத் தலைவர் நியமனம் தொடர்பான விதிமுறைகளை திருத்தியதாகவும், இது குறித்து மத்திய அரசுக்கும், தேர்தல் ஆணையத்திற்கும் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளதாகவும் டாக்டர்.கிரண்பேடி கூறினர்.

><><

நேரடி அன்னிய முதலீடுகளை அதிக அளவில் ஈர்க்கக்கூடிய முதல் 3 மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழ்வதாக தமிழக முதலமைச்சர் திரு.எடப்பாடி.பழனிச்சாமி கூறியுள்ளார். இன்று சென்னையில், சர்வதேச ஜெய்ன் வர்த்தகர் கூட்டமைப்பின் மாநாட்டைத் தொடக்கிவைத்துப் பேசிய அவர், தமிழகத்தில் ஒற்றைச் சாளர முறையில் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்படுவதால், ஜெய்ன் சமூகத்தினர் மாநிலத்தில் அதிக முதலீடு செய்யவேண்டும் என்றூர். தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கு திறம்பட்ட முறையில் பராமரிக்கப் படுவதாகவும், தொழில் துறையினருக்குத் தேவையான தடையற்ற மின்சாரம், தரமான உள்கட்டமைப்பு, பயிற்சிபெற்ற மனிதவளம் உள்ளிட்ட எல்லா வசதிகளும் தமிழகத்தில் கிடைப்பதாகவும் அவர் தெரிவித்தார். தமிழக அரசின் 2–ஆவது உலக முதலீட்டாளர் மாநாட்டை வரும் ஜனவரி மாதம் நடத்த உத்தேசிக்கப் பட்டுள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினர்.

><><

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா–வின் பிறந்தநாளை ஒட்டி, தமிழக அரசு நாளை பணிபுரியும் பெண்களுக்கான ஸ்கூட்டர் மானியத் திட்டத்தைத் தொடக்குவதுடன், வேறுபல நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்துள்ளது. ஜெயலலிதா–வின் 70–ஆவது பிறந்தநாளை ஒட்டி, 70 லட்சம் மரக் கன்றுகளை நடுத் திட்டத்தையும், பிரதமர் நாளை தொடக்கிவைக்கிறார். இதனுல், தமிழகத்தின் பசுமைப் பரப்பு கணிசமாக மேம்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது அல்லாது, சென்னை–யில் உள்ள அஇஅதிமுக தலைமையகத்தில், எம்ஜிஆர் சிலைக்கு அருகே நிறுவப்பட்டுள்ள ஜெயலலிதா–வின் முழு உருவச்சிலையை தமிழக முதலமைச்சர் திரு.எடப்பாடி.பழனிச்சாமி, துணை முதலமைச்சர் திரு.ஓபன்னீர்செல்வம் ஆகியோர் நாளை திறந்துவைக்கிறார்கள். அஇஅதிமுக–வின் அதிகாரபூர்வ ‘நமது அம்மா’ நாளேடும் நாளை தொடக்கிவைக்கப் படுகிறது.

><><

தமிழகத்தைப் போல புதுவை அரசும் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றை நடத்தி, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென புதுவை சட்டமன்ற அஇஅதிமுக குழுவின் தலைவர் திரு.அன்பழகன்

கோரியுள்ளார். இன்று இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர், காவிரி நதி நீர் மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டால்தான், உச்ச நீதிமன்ற உத்தரவை அமல்படுத்த ஏதுவாகும் என்றும், இதைக் கருத்தில்கொண்டே தமிழக அரசு நேற்று அனைத்துக்கட்சிக் கூட்டம் நடத்தியிருப்பதாகவும் கூறினார். தமிழகத் தலைவர்கள் நாளை சென்னையில் பிரதமரை சந்தித்து, காவிரி நீர் மேலாண்மை வாரியம் அமைக்க கோர இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். புதுவை–யின் காரைக்கால் பகுதிக்கு காவிரி நீர் கிடைக்க, புதுவை அரசும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு, தமிழக அரசுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என்று திரு.அன்பழகன் மேலும் வலியுறுத்தினார்.

><><><

புதுவையில் உள்ள பஞ்சாலைகளை புணரமைக்க மத்திய அரசு 500 கோடி ருபாய் நிதி வழங்கவேண்டும் எனக்கோரி, புதுவை வடக்கு மாநில திமுக அமைப்பாளர் திரு.எஸ்.பி.சிவக்குமார், பிரதமர் திரு.நரேந்திர மோடி–க்கு கடிதம் எழுதியுள்ளார். 13 ஆயிரம் தொழிலாளர்களுடன் செயல்பட்டு வந்த புதுவை ஏஎப்டி பஞ்சாலை, இந்திய ராணுவத்திற்குத் தேவையான பாராசூட் துணியைத் தயாரித்து வழங்கி வந்ததையும், ஐரோப்பிய நாடுகளுக்கு துணி ரகங்களை ஏற்றுமதி செய்துவந்த இந்த நிறுவனம் தற்போது செயல்படாத நிலையில் இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். புதுவையில் படித்து வேலை கிடைக்காத பல்லாயிரம் இளைஞர்கள் உள்ள நிலையில், நாட்டிலேயே குற்ற விகிதத்தில் 9–ஆவது இடத்திலும், தற்கொலை எண்ணிக்கையில் முதலாவது இடத்திலும் புதுவை இருப்பதை அவர் சுட்டிக்காட்டி, இந்நிலை மாறவேண்டுமானால், பஞ்சாலைகளை புனரமைக்க வேண்டிய அவசியம் என்றார்.

><><><

தூத்துக்குடி–யில் அண்மையில் சிபிஎம் தொண்டர்களை போலீசார் தாக்கியதாகக் கூறியும் அதைக் கண்டித்தும் இன்று புதுவையில் அக்கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேரு வீதி, காந்தி வீதி சந்திப்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் மாநிலச் செயலர் திரு.ராஜாங்கம், நகரச் செயலர் திரு.மதிவாணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். தாக்குதலில் ஈடுபட்ட போலீசார் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்போராட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டது.

><><><

11 ஆயிரத்து 300 கோடி ருபாய் பஞ்சாப் நேஷனல் வங்கிக் கடன் மோசடியைக் கண்டித்து இன்று புதுவையில் இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் பஞ்சாப் நேஷனல் வங்கிக் கிளையின் முன்பாக மலர் வளயம் வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த மோசடிக்கு, மத்தியில் உள்ள பிஜேபி அரசுதான் காரணம் எனக் குற்றம் சாட்டி, முன்னதாக ஊர்வலம் ஒன்றையும் இவர்கள் நடத்தினர்.

><><><

கச்சத்தீவு அந்தோணியார் கோவில் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியுள்ளது. தமிழகத்தில் இருந்து, பெண்கள், குழந்தைகள் உட்பட மொத்தம் 2 ஆயிரத்து 103 பேர் விழாவில் கலந்துகொள்ளச் சென்றுள்ளனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு.நரேந்திர மோடி, இன்று புதுடில்லி–யில், கனடா பிரதமர் திரு.ஜஸ்டின் ட்ருடோ–வுடன் பிரதிநிதிகள் நிலையில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பிரதமர் திரு.நரேந்திர மோடி–யின் வருகையை ஒட்டி, தமிழகத்திலும், புதுவையிலும் பாதுகாப்பு வலுப்படுத்தப் பட்டுள்ளது.

நேரடி அன்னிய முதலீடுகளை ஈர்ப்பதில், முன்னணி மாநிலமாக தமிழகம் திகழ்வதாக தமிழக முதலமைச்சர் திரு.எடப்பாடி.பழனிச்சாமி கூறியுள்ளார்.

தமிழகத்தைப் போல, புதுவை அரசும், காவிரி பிரச்சனை தொடர்பாக அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தவேண்டுமென அஇஅதிமுக கோரியுள்ளது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை நிறைவுபெறுகிறது.